வ.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல : 11 / 2018

எனது இல : **NP/07/10/01/107**
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்,
26.03.2018.

பிரதம செயலாளர்,
ஆளுநரின் செயலாளர்,
அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

**வடக்கு மாகாண பொதுச்சேவையின் மாகாண முகாமைத்துவ உதவியாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2018**

வடக்கு மாகாண பொதுச்சேவையின் மாகாண முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு காணப்படும் **91** பதவி வெற்றிடங்களுக்கு (வெற்றிடத்தின் 30%) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையானது வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் **2018 மே மாதம்** நடாத்தப்படும் என அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **26.04.2018** ஆகும்.

## 02. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :-

02.1 2013.04.02 ஆம் திகதியிலிருந்து செயல் வலுப்பெறும் வகையில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட மாகாண முகாமைத்துவ உதவியாளர் பதவிக்குரிய சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் மற்றும் அப்பதவிகளின் சேவைப்பிரமாணக் குறிப்பில் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் திருத்தங்களிற்கும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் **1817/30** ஆம் இலக்க **2013.07.03**ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கு உட்பட்டு, தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் குறித்த மாகாண முகாமைத்துவ உதவியாளர் பதவியின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

02.2 இப் பரீட்சையில் சித்திபெற்ற பரீட்சார்த்திகள் நியமனத்திகதியிலிருந்து ஓராண்டு காலம் பதில் கடமை தகுதிகாண் அடிப்படையில் நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு மாகாண முகாமைத்துவ உதவியாளர் பதவியில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 03வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமை காண் தடைப்பரீடசையில் சித்தியெய்தல் வேண்டும்.

02.3 இச்சேவைகள் இடமாற்றத்திற்குட்பட்ட சேவைகளாகும். இதனால் இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்படிதல் வேண்டும்.

02.4 ஒரு சேவை நிலையத்தில் நியமனம் பெறுபவர், அதே சேவை நிலையத்தில் குறைந்தது 05 வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றுதல் வேண்டும் என்பது கட்டாய நிபந்தனையாகும்.

02.5 பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமைய நியமனத் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

02.6 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். அறிவிக்கப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பில் சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார். நியமிக்கப்படவுள்ள ஆட்களின் எண்ணிக்கை **நிலவும் வெற்றிடத்தின் 30%** ஆகும்.

## 03. சம்பள அளவுத்திட்டம் :-

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 2 - 2016** க்கு ஏற்ப மாகாண முகாமைத்துவ உதவியாளர் பதவியின் தரம் - III இற்கான திரட்டிய சம்பள விகிதமானது **ரூபா 28,940 – 10 x 300 - 11 x 350 - 10 x 560 – 10 x 660 – 47,990/-** ஆகும். (ரூபா 29,840/- சம்பள படிநிலைக்கு முன் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை – II இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

## 04. பொதுவான தகைமைகள் :-

04.1 விண்ணப்பதாரி ஒரு இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

04.2 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த தேகாரோக்கியமும் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

04.3 விண்ணப்பதாரி, **விண்ணப்ப முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் சகல தகைமைகளையும்** கொண்டிருத்தல் வேண்டும்.

04.4 மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலமான ஆட்சேரப்பின் போது **உச்ச வயதெல்லை** ஏற்புடையதல்ல.

## 05. கல்வித் தகைமை மற்றும் ஏனைய தகைமைகள் :-

### 05.1 கல்வித் தகைமைகள் :-

கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆகக் குறைந்தது இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி மற்றும் கணிதம் / எண் கணிதம் / தூய கணிதம் / அடிப்படைக் கணிதம் / வர்த்தக எண் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

### 05.2 ஏனைய தகைமைகள் :-

(அ). **வடக்கு மாகாண சேவையில்** நிரந்தரப் பதவியை வகிப்பதுடன் அப்பதவியில் உறுதிப்படுத்தப்பட்டும், பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/ 2016 இற்கமைய PL 1 – 2016, PL 2 – 2016, PL 3 – 2016, MN 1 - 2016 சம்பளக் குறியீட்டுக்களின் கீழ் சம்பளத்தினைப் பெற்றுக்கொள்ளும் ஓர் அலுவலராக இருத்தல் வேண்டும்.

(ஆ). விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடன் முன்வரும் **ஐந்து (05)** வருடகாலப் பகுதி தொடர்ச்சியாகவும், திருப்திகரமாகவும் வடக்கு மாகாண சேவையில் நிரந்தரப் பதவியில் சேவையாற்றியுள்ளவராக இருக்க வேண்டுமென்பதுடன், அதனை திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

**குறிப்பு :**
ஏதேனும் பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு முன் சேவையாற்றியுள்ள அல்லது ஏதேனும் பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு நிபந்தனையாக சேவையாற்றியுள்ள அல்லது பயிற்சி பெறுவதற்கான கால எல்லையாக மேற்படி **05.2(ஆ)** இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பெறுவதற்கான ஐந்தாண்டுக் காலவெல்லையாக கணக்கிலெடுக்கப்படமாட்டாது. ஏதேனும் பதவியொன்றில் நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு முன்னர் சேவையாற்றியுள்ள தற்காலிக / அமய அடிப்படையில் சேவையாற்றியுள்ள காலப்பகுதிகளையும் மேற்படி **05.2(ஆ)** இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெறுவதற்கான **ஐந்து (05)** ஆண்டு காலவெல்லையாக கணக்கிலெடுக்கப்படமாட்டாது.

**கவனிக்க :**
**ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவிக்குரிய எல்லாத் தகைமைகளையும் 2018.04.26 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.**

## 06. ஆட்சேர்ப்பு முறை :-

06.1 எழுத்துப் பரீட்சை மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாகவும் ஆட்சேர்ப்பு செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின்போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரிய வந்தால் இப் பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். நேர்முகப்பரீட்சையின் போது சகல தகைமைகளும் பரிசீலிக்கப்படும். இதன் போது புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

06.2 மேற்படி தகைமையடைந்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து, எழுத்துப்பரீட்சையில் தகைமைபெறும் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப்புள்ளிகளின் வரிசை ஒழுங்கில் நியமனத்திற்கான நேர்முகத் தேர்விற்கு தெரிவு செய்யப்படுவர்.

06.3 முகாமைத்துவ உதவியாளர் தரம் III பதவிக்கு நிலவும் வெற்றிடத்தின் 30% ஆனது மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலமாக தகைமைபெறும் பரீட்சார்த்திகளிடமிருந்து நிரப்பப்படும்.

06.4 நிலவும் வெற்றிட எண்ணிக்கையில் மூன்று வீதம் (03%) மாற்றுத்திறனாளியான நபர்களுக்காக ஒதுக்கப்படும். தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் மொத்தப் புள்ளிகளில் குறைந்த பட்சம் 50% ஆவது பெற்றிருத்தல் வேண்டும். நியமனமொன்றுக்காக தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்தியொருவர்

தனது மாற்றுத்திறனாளியான நிலைமையானது சம்பந்தப்பட்ட பதவியில் கடைமையாற்றுவதற்கு தடையாக இராது என்பதை விசேட மருத்துவ அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

**குறிப்பு** :-
விண்ணப்பதாரி மாற்றுத்திறனாளிகளுக்கான புனர்வாழ்வு நிலைமையின் கீழ் உரியவாறு விண்ணப்பிக்கின்றார் என்பதை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும் என்பதுடன் அங்கவீனமற்ற ஆள் ஒருவர் அங்கவீனமுற்ற ஆளொருவராக அவராகவே கருதக் கூடாது.

## 07. பரீட்சைக் கட்டணம் :-

விண்ணப்பதாரி வதியும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் ரூபா **500/-** ஐ **வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர்** அவர்களின் **"3401"** என்ற வைப்புக் கணக்கிற்குச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 08. விண்ணப்பிக்கும் முறை :-

08.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக A4 அளவிலான (21செ.மீ x 29செ.மீ) தாளின் 1 முதல் 4.5 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும், 4.6 முதல் 7.0 வரையான பந்திகள் இரண்டாம் பக்கத்திலும் ஏனையவை மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை **26.04.2018** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

08.2 அனுப்பிவைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "**வடக்கு மாகாண பொதுச்சேவையின் முகாமைத்துவ உதவியாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை – 2018"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும்

08.3 விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணபத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படலானது விண்ணபதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக்கருதப்படலாகாது.

08.4 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 03 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி பின்வரும் விபரங்களுடன் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல – **021 221 9939**, தொலைநகல் இல - **021 221 9940**)

**குறிப்பு** :-
கோரிக்கைக் கடிதம், பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், விண்ணப்பதாரியின் அஞ்சல் முகவரி, விண்ணப்பப் படிவத்தின் பிரதி, விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், மற்றும் திகதி, பரீட்சைக்கட்டணம் செலுத்தியதற்கான சான்றுப்படுத்திய நிழற்படப்பிரதி, அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கம்.

## 09. ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :-

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள்அடையாள அட்டை
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை **செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்** அவர்களின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீசார்த்திகள் அமைந்தொழுக வேண்டுமென்பதுடன் அச்சட்டதிட்டங்களை மீறினால் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

## 10. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்பத்திலாவது தகைமையற்றவர் எனத்

தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பரதாரி சமா்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தா்ப்பத்திலும் அவா் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 11. பரீட்சைத் திட்டம் :-

இவ் எழுத்துப் பரீட்சையானது கீழ்க் குறிப்பிட்டவாறான வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் என்பதுடன். இப்பரீட்சை தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழியை பின்னா் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| இல | வினாத்தாள் | காலம் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. | உளச்சார்பு | **01** மணித்தியாலம் | 100 |
| 02. | முகாமைத்துவ உதவியாளர்களுக்கான மொழித்திறன் மற்றும் தகைமைகாண் பரீட்சை | **02** $^1/_2$ மணித்தியாலங்கள் | 100 |

**01. உளச்சார்பு :-**
இவ்வினாப்பத்திரம் எண்கள் தொடா்பான திறன்கள், தா்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் மற்றும் பொது விவேகம் ஆகியவற்றைச் சோதிப்பதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும்.

**02. முகாமைத்துவ உதவியாளர்களுக்கான மொழித்திறன் மற்றும் தகைமைகாண் பரீட்சை :-**
இவ்வினாப்பத்திரம் வெளிப்படுத்தல், கிரகித்தல், எழுத்துக் கோர்வை, மொழி மற்றும் கட்டுரை, கொடுக்கப்படும் தரவுகளுக்கிணங்க கடிதத்தினை வரைதல், கொடுக்கப்படும் பந்திகளைச் சுருக்கி எழுதுதல், சில வாக்கியங்களின் உள்ளடக்கத்தினை ஒரு வாக்கியமாக எழுதுதல், கொடுக்கப்படும் தரவுகளைக் கொண்டு வரைபுகள் மற்றும் அட்டவணைகளைத் தயாரித்தல், எளிய இலக்கண விதிகளைப் பிரயோகித்தல், அலுவலக ஆவணங்கள் தொடா்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் விதம் மற்றும் அலுவலா் நடவடிக்கை எடுக்க வேண்டிய விடயங்களை உள்ளடக்கிய கடிதம் தொடா்பில் நடவடிக்கை எடுக்கும் விதம் தொடா்பிலான அடிப்படை விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள் போன்ற முகாமைத்துவ உதவியாளா் ஒருவரின் கடமைகள் குறித்து பரீட்சாா்த்தியின் அறிவினை சோதித்தல், நினைவூட்டல் நாட்குறிப்பு, பண உறுதிச் சீட்டுகள், நகா்வுத் தாள்கள், வரவுப் பதிவேடு, திகதியிடும் முத்திரை, முத்திரை, இறப்பா் முத்திரை மற்றும் தபால் பை, மற்றும் அவற்றின் பயன்பாடு போன்ற அலுவலகத்தில் பிரயோகிக்கப்படும் முறைமைகள் பற்றி பரீட்சாா்த்தியின் அறிவினைச் சோதிப்பதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும்.

**குறிப்பு :-**
**நேர்முகப் பரீட்சையின் பொருட்டு தகைமை பெறுவதற்கு எழுத்துப் பரீட்சையின் ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் குறைந்த பட்சம் 40% புள்ளிகள் பெறுவதுடன் மொத்தப் புள்ளிகளில் ஆகக்குறைந்தது 50% தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.**

## 12. பரீட்சைப் பெறுபேறுகள் :-

பரீட்சாா்த்திகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவா்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளம் மூலம் வெளியிடப்படும். பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய ஒவ்வொரு பரீட்சாா்த்திக்கும் தபால் மூலமாக அனுப்பிவைக்கப்படும்.

**13.** பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு,

| நகரம் | நகர எண் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 01 |
| மன்னார் | 02 |
| வவுனியா | 03 |
| கிளிநொச்சி | 04 |
| முல்லைத்தீவு | 05 |

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

**14.** இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்து செய்தல் தொடா்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு. இவ் விளம்பரத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

**சி.ஏ.மோகன்ராஸ்.**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
**26.03.2018**